# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : STC 717/2022**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 21.08.2023**

| | |
|---|---|
| **Name : சாமிதுரை** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் வீரனூரில் குடியிருந்து விவசாயம் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தவர் எனது ஊரைச்சேர்ந்த பழனிசாமி ஆவார். கடந்த 2022–ம் வருடம் காலை 7 மணிக்கு பழைய ஆர்.டி.ஓ ஆபிஸ் அருகே தங்கமாபுரி பட்டிணம் வரும் வழியில் மேட்டூர் சாலையில் கருமலைக்கூடல் போலிசார் வரைபடம் வரைந்தனர்.

2) அதில் நானும், சங்கர் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் **அ.சா.ஆ 2** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் படித்து காண்பித்தார்கள் நான் தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். போலிசார் என்னிடம் எங்கு வைத்து கையொப்பம் பெற்றார்கள் என்றால் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் பெற்றனர். மகசர் எத்தனை தாள் கொண்டது என்றால் தெரியாது. அதில் எழுதப்பட்ட விவரம் தெரியாது என்றால்

சரிதான்.

4) விபத்து குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தனர் என்றால் 3 முறை விசாரித்தனர். விசாரித்த நேரம் சுமாரா 12 மணி இருக்குமா என்றால் காலை 07.30 மணிக்கு விசாரித்தார்கள்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/-தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**